**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 108/2020 |
| Name | : | Muruganandam |
| P.W. | : | 6 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2026

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

நான் தற்போது கணியூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் ராமலிங்கம் மற்றும் முதற்கட்ட விசாரணை செய்த உதவி ஆய்வாளர் சண்முகம் மற்றும் ஆய்வாளர்கள் முருகன் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.01.2019 ம் தேதி தலைமை காவலர் ராமலிங்கம் நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த முருகன் மகன் திருமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கணியூர் காவல் நிலைய குற்ற எண்.08/2019 இதச பிரிவுகள் 279, 337 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதிமன்றத்திற்கும், அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்குக் கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்கள் 09.01.2019 ம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் அசோக்குமார் மற்றும் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் திருமூர்த்தி, கார்த்திகேயன், துரைசாமி, வீரக்குமார் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட துக்கையப்பன் 09.01.2019 ம் தேதி 17.15 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 279, 337 ல் இருந்து இதச பிரிவுகள் 279, 337, 304(A) ஆக சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்குக் கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கில் இறந்து போன துக்கையப்பன் என்பவரின் பிரேதத்தின் மீது பல்லடம் அரசு மருத்துவமனையில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்துள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் இறந்து போன துக்கையப்பன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து துக்கைப்பன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் தினேஷ் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை

பெற்றுள்ளார். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 78 9000 Martuhi swift கார் மற்றும் TN 78 B 1168 TVS Sport, TN 42 J 6223 Bajaj Platina இருசக்கர வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்த வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் முத்துக்குமார் அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். **TN 78 9000 Maruthi swift காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், மற்றும் TN 78 B 1168 TVS Sport இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.10 ஆகவும், TN 42 J 6223 Bajaj Platina அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் காயம்பட்ட கார்த்திகேயனுக்கு சிகிச்சை அளித்த திருப்பூர் தீபா மருத்துவமனை மருத்துவர் முகம்மது அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றுள்ளார். **கார்த்திகயேனின் காயச் சான்று அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காயம்பட்ட வாதி திருமூர்த்திக்கு சிசிக்கை அளித்த கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் ராய் வில்சன் ஆர்ம்ஸ்ட்ராங் அவர்களை விசாரித்து வாக்குமூலம பதிவு செய்து காயச் சான்று பெற்றுள்ளார். **திருமூர்த்தியின் காயச் சான்று அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் எதிரியை 20.01.2019 ம் தேதி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். உடுமலை அரசு மருத்துவமனை மருத்துவர் முகம்மது பைசர் அவர்களை விசாரித்து துக்கையப்பன், திருமூர்த்தி மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்களின் விபத்து பதிவேடுகளை பெற்றுள்ளார். **துக்கையப்பன், திருமூர்த்தி மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்களின் விபத்து பதிவேடுகள் முறையே அ.சா.ஆ.14 முதல் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் சாட்சிகளை விசாரித்து புலன் விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 27.04.2019 ம் தேதி இதச பிரிவுகள்

279, 338, 304(A) ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பார்வை மகஜரிலோ, மாதிரி வரைபடத்திலோ வழக்கு சம்மந்தப்பட்ட மாருதி கார் எதுவும் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாருதி கார் இரண்டு இரு சக்கர வாகனங்களின் மீது மோதியது என்பது தான் அரசுத் தரப்பு வழக்கு என்றால் சரிதான். அவ்வாறு இருப்பின் காரின் முன் பக்கம் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். அ.சா.ஆ.9 மாருதி காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் வாகனத்தின் வலது பக்கவாட்டில் தான் அடிபட்டதாக உள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனங்கள் தான் காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் கார் அவற்றின் மீது மோதவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்று தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.08.07 18:47:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்